12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(எ) தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டமுன்வடிவு, 2018

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2018), மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2018)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. எஸ். சுதர்சனம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட வன்னியர் நல வாரியம், இந்தச் சட்டமுன்வடிவு மூலமாக இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் எதிர்க்கவில்லை. இருந்தாலும், இதிலே சில ஐயப்பாடுகள் இருக்கின்றன.* Section 9*–ல்* Chairman*–க்கு கல்வித் தகுதி எவ்வளவு இருக்க வேண்டுமென்று சொல்லப்படவில்லை. அவர் எப்படித் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று இதிலே இல்லை;* clear *ஆகச் சொல்லப்படவில்லை. சில*

@ 5–7–2018 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

2018 ஜூலை 5] [திரு. எஸ். சுதர்சனம்]

ஐயப்பாடுகள் இருக்கின்றன. அதேபோல, Section 12–ல், எவ்வளவு காலத்திற்கு ஒருமுறை Board கூடும் என்பது specific ஆகச் சொல்லப்படவில்லை. இதையெல்லாம் specific ஆகச் சொல்ல வேண்டுமென்பது எங்களுடைய கோரிக்கையாகும். மேலும், Section 14–ல், குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் குழுவில் technical persons எப்படி இருக்க வேண்டுமென்பதை அவர்கள் தெளிவாகத் தெரிவிக்கவில்லை. இவற்றையெல்லாம் தெளிவாகத் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டுவர வேண்டும்.

அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்கள் மூன்றாவது முறையாக முதல்வர் ஆன பிறகு, வன்னியர் சமுதாயத்திற்கு 20 சதவிகித ஒதுக்கீட்டைத் தந்து, இன்று பல்லாயிரக்கணக்கான வன்னியர்களெல்லாம் Engineer ஆகவும், வழக்கறிஞராகவும், டாக்டராகவும் இருக்கிறார்கள். அவர் எப்படி வன்னியர் சமுதாயத்திற்கு நல்லதைச் செய்து ஆட்சி நடத்தினாரோ, அந்த spirit–டோடு இந்த ஆட்சியும், இந்தச் சட்டமுன்வடிவை விரைவாகச் சட்டமாக்கி, பல இலட்சம் கோடி பெருமானம் உள்ள சொத்துகளையெல்லாம் மீட்டு, வன்னியர் சமுதாயத்திற்கு அளிக்க வேண்டுமென்பதை நான் இங்கே கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே, கந்தசாமி நாயுடு டிரஸ்ட், செங்கல்வராய நாயக்கர் டிரஸ்ட் எல்லாம் பச்சையப்பா டிரஸ்ட்டோடு சேர்ந்து உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, பிரிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்போதுகூட, கோவிந்த நாயக்கர் டிரஸ்ட் ஒன்று பிரிக்கப்பட்டு, இயங்கிக் கொண்டிருக்கிறது. இதுபோன்ற பல டிரஸ்ட்டுகள், வன்னிய சமுதாய மக்களெல்லாம், அந்தக் காலத்தில் வாழ்ந்தவர்களெல்லாம், சாதி பார்க்காமல் மற்றவர்கள் நிருவகிக்கட்டும் என்று கொடுத்தவற்றையெல்லாம், இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாகக் கண்டறிந்து, அவற்றையெல்லாம் பிரித்து, வன்னியர் சமுதாயத்திற்கு வழங்கி நல்லதைச் செய்ய வேண்டுமென்பதை கோரிக்கையாக வைத்து, நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும்

பேணி வருதல்) சட்டம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. தமிழகமெங்கும் எங்கும் இருக்கின்ற பல வன்னிய குல வள்ளல்கள், கல்வி நிலையங்கள் மற்றும் திருமண நிலையங்களைத் தானமாக வழங்கி, பல்வேறு அன்னதானங்கள் வழங்க வேண்டுமென்று எழுதிவைத்து, கோடிக்கணக்கான சொத்துகளை அறக்கட்டளைகள்மூலம் கொடுத்திருக்கின்றார்கள். அந்த அறக்கட்டளைமூலம் எழுதி வைக்கப்பட்ட சொத்துகள் இப்போது முறையாகப் பராமரிக்கப்படவில்லை. எந்த நோக்கத்திற்காக அந்தச் சொத்துகள் எழுதி வைக்கப்பட்டனவோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. பல்வேறு அறக்கட்டளைகளின் சொத்துகள் எங்கே இருக்கின்றன என்பதைக்கூட கணக்கெடுக்க முடியாத ஒரு நிலை இருக்கின்றது.

பிற்பகல் 5-00

உங்கள் ஆட்சியில் அந்த வாரியம் அமைக்கப்பட்டது. அந்த வாரியம் அமைக்கப்பட்டாலும், அந்த வாரியத்திற்கு முழு அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சட்டம் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டத்தின்மூலம் அந்த வாரியம் அமைக்கப்படும். இதில் தலைவருக்கான கல்வித் தகுதிகள் சொல்லப்படவில்லை என்று நீங்கள் சொன்னீர்கள். அதில் 10 பேர் உறுப்பினர்கள், ஒருவர் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி அல்லது உயர் நீதிமன்ற நீதிபதி அல்லது முன்னாள் மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோல் ஒரு இந்திய IAS Officer அல்லது IPS Officer ஆக இருக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. Original ஆக நீங்கள் கொண்டுவந்த சட்டத்தின்படி CEO—அதாவது, தலைமை நிருவாகியாக இருப்பவர் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் என்று சொல்லப்பட்டிருந்தது. அதை இப்போது திருத்தி, Wakf Board-ல் எப்படி அரசாங்கத்தில் Deputy Secretary level-லில் இருக்கின்ற ஓர் அதிகாரி நியமிக்கப்பட வேண்டுமோ, அதேபோன்று இந்த வாரியத்திலும் Deputy Secretary level-ல் ஓர் அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

குழுக்கள் அமைப்பதைப்பற்றி இங்கே சொல்லியிருக்கின்றீர்கள். அந்த வாரியம் ஒரு சொத்தைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்றால் அதற்காக எத்தனை குழுக்களை வேண்டுமானாலும் நியமித்துக்கொள்ளலாம். அந்தக் குழுக்களுக்கு, நீங்கள்

2018 ஜூலை 5] [திரு. சி.வி. சண்முகம்]

கூறியதைப்போல், தேவையான, தகுதியான நபர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. தேவையான கூட்டங்களைக் கூட்டி நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று இந்தச் சட்டத்தில் அனைத்தும் சொல்லப்பட்டிருக்கின்றது. நீங்கள் சொல்லியதைப்போல் பல்வேறு சொத்துகள் பல்வேறு நபர்களுக்கு கைமாறி இருக்கின்றன. நீதிமன்றத்தின் மூலமாகச் சில சொத்துகள் பராமரிக்கப்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அனைத்துச் சொத்துகளும், அனைத்து அறக்கட்டளைகளும், புதியதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் சரி, ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளைகளாக இருந்தாலும் சரி, அவர்களும் தங்களது அறக்கட்டளையை இதில் பதிவு செய்துகொள்ள வேண்டும். வன்னியகுல சத்திரியர்கள் உட்பட அதில் பயன் அடைகின்றவர்கள் யாராக இருந்தாலும், அந்த அறக்கட்டளையை இந்த வாரியத்தில் பதிவு செய்வதன்மூலம், அந்த வாரியம் அந்த அறக்கட்டளைகளை நிருவகிக்கின்ற பொறுப்பை ஏற்கும் என்பது உட்பட இந்தச் சட்டத்தின்மூலம் அனைத்தும் முழுமையாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே, எந்த நோக்கத்திற்காக இந்த அறக்கட்டளைகள், பொறுப்பாட்சிகள், இந்த நிலைக்கொடைகள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவோ, அதை நிறைவேற்றுகின்ற நல்ல நோக்கத்தோடு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடைபெறும் இந்த அரசு, நீண்டநாள் கோரிக்கையான வன்னிய சமுதாயத்தினுடைய கோரிக்கையை நிறைவேற்றி இருக்கின்றது. ஆகவே, இதை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்கரபாணி, ஏற்கெனவே என்ன மரபு என்று கேட்டீர்களென்றால், சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்து, நாம் ஆய்வு செய்கின்றபோது காலம் காலமாக கட்சிக்கு ஒருவர்தான் பேசுவது இங்கே வழக்கமாக இருந்து வருகின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) இதில் point of order எல்லாம் இல்லை. (குறுக்கீடு) இல்லை, இதெல்லாம் முறை இல்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த முறையை allow செய்தால், தொடர்ந்து எல்லா சட்டமுன்வடிவிலும் நாள் கணக்கில் பேசிக்கொண்டு இருப்போம். (குறுக்கீடு) இல்லை, வேறு ஒன்றும் பேச முடியாது. (குறுக்கீடு) சட்டமுன்வடிவை ஆய்வு

செய்யும்போது அதைப்பற்றித்தான் பேச வேண்டும். தேவை இல்லாததையெல்லாம் பேச முடியாது, உட்காருங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டுமா? இல்லையா, சரி விட்டுவிடுங்கள். மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம். . . (குறுக்கீடு) அது உங்கள் இஷ்டம்.

(திரு. எஸ். சுதர்சனம் தவிர தி.மு.க. உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 91 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 91 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2018 ஜூலை 5] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறநிலைப் பொறுப்பாட்சிகள் மற்றும் நிலைக்கொடைகள் (பாதுகாத்தல் மற்றும் பேணிவருதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2018) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 9–7–2018 (திங்கட்கிழமை), காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS